# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 96
ஏப்ரல் 2017



## உலக நூலகர் தினம்




KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்

## The Dawn

இதழ்-96, ஏப்ரல்-2017



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**திரு. மு.சதீஸ்குமார்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. இரவிச்சந்திரன்
முனைவர் ம. லோகேஷ்வரன்
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதீபா
திரு. மு. சத்தியராஜ்
முனைவர் ப. சிலம்பரசன்
திரு. ந. சரவணன்


## தலையங்கம்

### உலகப் புத்தக தினம்

புத்தகங்களைவிடச் சிறந்த நண்பன் வேறில்லை என்பதைப் புத்தகப் பிரியர்கள் மனமார ஒப்புக்கொள்வார்கள். அதேபோல, **“சொர்க்கம் என்பது ஒரு வகையான நூலகம் போல இருக்கும் என்றே எப்போதும் கற்பனை செய்திருக்கிறேன்”** என்று **லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் ஜார்ஜ் போர்ஹேவின்** கருத்தையும் குதூகலத்துடன் ஏற்றுக்கொள்வார்கள். பாரீஸ் நகரில் 1995-ம் ஆண்டு ஆகஸ்டு 25 முதல் நவம்பர் 16-ந்தேதி வரை நடந்த யுனெஸ்கோவின் 28-வது மாநாட்டில் **‘‘அறிவை பரப்புவதற்கும் உலகமெங்கும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கும் புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தவும் புத்தகம் சிறந்த கருவியாக உள்ளதால் ஏப்ரல் 23-ந்தேதி உலக புத்தக தினமாக கொண்டாடப்படும்’**


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாம் படிக்கத் தெரிந்த காலம் முதல் புத்தகம் படிக்கிறோம்..! புத்தகம் என்பது ஒரு காலத்தின் வரலாறு. வரலாறு எழுத்துகள் மூலம் பதிவு செய்யப்படுகிறது. புத்தகங்களைச் சேமிக்கும் இடத்தை நூலகம் என்கிறோம். உளவியல் வல்லுநர்கள் குழந்தைகளுக்குப் பேசத் தெரியாவிட்டாலும் கூட புத்தகம் படித்துக் காட்ட வேண்டும் என்று கூறுகின்றனர். அதனால் அவர்களின் மூளை வளர்ச்சியும், அறிவுத்திறனும், முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும் என்று கூறுகின்றனர். எப்படியாயினும் புத்தகப் படிப்பை ஊக்குவிக்க, சிலசமயம் ஒரு தூண்டுதல் தேவையாயிருக்கிறது. புத்தகத்தின் தேடலுக்கு, வாசிப்பு ருசிக்கு யாரோ ஒருவர் தூண்டலாக இருந்திருக்கின்றனர். இன்றைய நவீன அறிவியல் யுகத்தில், வலைத்தளமும், தொலைபேசி, கைபேசிகளும், மின்னஞ்சலும், முக்கியமாகத் தொலைக்காட்சியும், மக்களிடையே புத்தகம் படிக்கும் பழக்கத்தை குறைத்துவிட்டன. புத்தக அறிவை வளர்க்காமல் புதைகுழிக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றன எனலாம். ஆனால் புத்தகம்தான் நிரந்தரமாய் நிலைத்து நின்று சுவையும், இன்பமும், ரசனையும் தரவல்லது. படிப்பதன் ஆழ்ந்த அருமையான சுவை என்பது, வலைத் தளத்தில் நிச்சயமாகக் கிடைக்காது. புத்தகம் என்பது ஒருவரின் சொத்து..! படிக்கப் படிக்க இன்பமும் தேடுதலும் கிடைக்கும். புத்தகம் படிக்காமல் ஒருவர் அறிவாளி ஆகிவிட முடியாது. தமிழ்நாட்டு நூலக வரலாற்றில் **பிதாமன் இராமாமிர்தம் ரங்கநாதன். இவர்தான் ‘‘சென்னை மாநிலத்தின் நூலகத் தந்தை’’** என்று அழைக்கப்பட்டு, மரியாதை செய்யப்படுபவர். 1928 ஜனவரியில் சென்னை நூலகச் சங்கம் ரங்கநாதனால் உருவாக்கப்பட்டது. இலக்கிய மேதை சேக்ஸ்பியரின் பிறந்த தினமான ஏப்ரல் 23 அன்று புத்தக தினம் கொண்டாடுவதை பொருத்தமான ஒரு விஷயமாக யுனெஸ்கோ மாநாடு கருதியது. புத்தகம் வெறும் எழுத்துக்களையோ, வெற்றுத்தாள்களின் தொகுப்புகளையோ கொண்டது அல்ல. ஒவ்வொரு

புத்தகமும் ஒரு படைப்பாளியின் எண்ணக்கனவு, லட்சியங்களைக் கொண்டிருக்கிறது. விதைக்குள் விருட்சம் போல் ஒரு சமூகத்தின் எழுச்சிக்கான கருத்துகளைச் சில புத்தகங்கள் தன்னுள் கொண்டிருக்கின்றன. அதனால்தான் ஆட்சி அதிகாரத்தையே உலுக்கிவிடும் பேராற்றல் ஒரு புத்தகத்திற்கு உண்டு என்கிறார் **கார்லைஸ்** எனும் அறிஞர். **''துப்பாக்கிகளை விட பயங்கரமான ஆயுதங்கள் புத்தகங்கள்''** என்று கூறி இருக்கிறார் **மார்ட்டின் லூதர் கிங்.** சட்டமேதை **அம்பேத்கார்** ஒருமுறை வெளிநாடு சென்றிருந்த போது, ''எங்குத் தங்கவிரும்புகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு, **''எந்த இடம் நூலகத்திற்கு அருகில் இருக்கிறது?''** எனக் கேட்டு இருக்கிறார். நவ இந்தியாவின் **சிற்பி ஜவகர்லால் நேரு**விடம், ''உங்களை ஒரு தனித் தீவுக்கு நாடு கடத்தினால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டதற்கு **''புத்தகங்களோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருப்பேன்''** என்று பதில் அளித்தார். குழந்தைகளுக்கு பிறந்தநாளின் போதும், விழாக்களின் போதும் எண்ணற்ற பரிசுகளை வாங்கித் தருகிறோம். **''குழந்தைகளுக்கு நீங்கள் வாங்கித் தர வேண்டிய மிகச்சிறந்த பரிசு புத்தகங்களே''** என்கிறார் **வின்ஸ்டன் சர்ச்சில்.** பூத்த மலரில் தான் நறுமணம் வீசும். ஓடுகின்ற நீரோடை தான் சுத்தமாக இருக்கும் எரிகின்ற விளக்கால் தான் இன்னொரு விளக்கை ஏற்ற முடியும். **அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு** என்பது **பாரதிதாசனின் வெறும் கவிதை வரிகள் அல்ல,** வேதவாக்கு. வாசிப்பை நேசிப்போம். வாசிப்பை சுமையாகக் கருதாமல் சுவாசத்தைப் போல் இயல்பானதாய் ஆக்குவோம்; அறிவை ஆயுதமாக மாற்றுவோம். தெருவெங்கும் நூலகம்; வீடுதோறும் புத்தகம். இதுவே நமது லட்சியம் என்பது வெறும் பேச்சில் மட்டும் இருக்கக் கூடாது... ஒன்றாக இணைந்து நமது லட்சியத்தை நிறைவேற்றுவோமாக...

# உள்ளுறை

## உலகப் புத்தக தினம்

கவிதைகள்................................... 05 – 16

அறிவியல் தகவல்……………17 - 21

மௌனக் கேள்விகள்................ 22 - 23

தத்துவக் கவிதை...................... 24 - 25

பொது அறிவு…………............ 25 - 28

சுதந்திரம் ஓர் பார்வை............... 29 - 32

# கவிதைகள்

## அம்மா

தொடர்ந்து துன்பம் தந்தாலும்
அந்த நட்பையும் சுமந்து கொண்டு
செல்பவள் நல்ல அன்னை
கடவுள் உலகத்தை
தாங்குவது போல்
குழந்தையைத் தாங்குபவள்
அன்னை.
ஈன்றவளுக்கு ஈடு இணை
எதுவும் இல்லை
இத்தகைய பெருமையைப் பெற்றவள்
அன்னையே…!

**க.பிரியதர்ஷினி**
**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## தாயுடனான சுதந்திரம்

நான் தவழ நீ
குழந்தை ஆனாய்
நான் தள்ளாடி தள்ளாடி நடக்க
நீ உன் கரம் கொடுத்தாய்
நான் தவறிக் கீழே விழ
நீ கண்ணீர் சிந்தினாய்
நீ ஊட்டிய பால் சோறு

என்னை வளர்த்தது
காதலென்ற காற்று வீச
மனதோடு மனம் சேர
உன் அன்பை
மறந்தேன்.
விரலோடு விரல் கோர்க்க
உன் கரங்களை மறந்தேன்
காதலா நீ சூடிய
மலர் மாலையில்
வீசிய உன் காதல் வாசம்
அழகான காதலை!
ஏன் பிரித்தாய்
என் அன்பான உறவே.
கல்லில் ஆன கடவுள்
காட்டில் இருக்கலாம்
நம் கண்முன்னே
அவதரித்த தெய்வம்
இப்படி இருக்கலாம்?
கிடைக்கலாம்? என்று,
கல்நெஞ்சம் கொண்ட
பிள்ளைகளே
கவனத்தில் கொள்ளவும்,
நாளை நமக்கும் இதே நிலைதான்

**க.பிரியதர்ஷினி**
**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## அம்மா

அடி முடி தேடினாலும்
அகராதியைப் புரட்டினாலும்,

உன் அன்பிற்கிணை ஏதம்மா,
முழுமையான அர்த்தம் - அம்மா,
அறிய முடியாத உயிர்ச் சித்திரம்,
என் உயிர் மூச்சு அனைத்தும் நீதான் அம்மா,
நீ என் தாய் மட்டும் அல்ல,
என் குழந்தையும் கூட.

**ம.சௌந்தர்யதர்ஷினி**
**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## எங்கள் இந்தியதேசம்

முப்பக்கமும் கடலால் சூழ்ந்திருக்கும்
எங்கள் இந்தியதேசம்!

ஒருபக்கம் மட்டும் தீவாய் நிறைந்திருக்கும்
எங்கள் இந்தியதேசம்!

பார் எங்கிலும் பசுமையாய்
பயிர்கள் விளைந்திருக்கும்!
எங்கள் இந்தியதேசம்!

அந்த பசுமையிலே எங்கள்
பாரத மக்களின் பசியைப் போக்கும்
எங்கள் இந்தியதேசம்!

பாருக்குள்ளே நல்லநாடு
எங்கள் பாரதநாடு என்று
அன்றே பாடினார் நம்கவி பாரதி!

எம்மதமும் சம்மதமே?
என்று மதச்சார்பற்று வாழும்
எங்கள் இந்தியதேசம்!

வேற்றுதாய் மக்களும் கூட
ஒருதாய் பிள்ளைப்போல்
சகோதர உணர்வுகளுடன்
வாழ்ந்திடும் எங்கள் இந்தியதேசம்!

பெண்களைக் கண்களாய்
போற்றிடும் எங்கள் இந்தியதேசம்!
காண்பவரெல்லாம் கண்டு
சிறப்பு கொள்ளும்
எங்கள் இந்தியதேசம்!

இந்த புனித பூமியில்
நான் ஒரு இந்திய குடிமகள்
என்று பெருமையோடு சொல்லிக் கொள்வேன்!

**செ.அப்சிகா**

**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## இயற்கை தாய்

தாயின் பாசத்தைப் போன்றும்
தந்தையின் அரவணைப்புப் போன்றும்
காற்றில் வரும் ஓசை
தாயின் தாலாட்டு போன்றது.
அருவியில் இருந்து விழும் தண்ணீர்
அது தாய்ப்பாலுக்குச் சமம்
வானத்தில் இருந்துவரும் சிறுதுளி

இயற்கை அமிர்தமாகும்
குயிலின் இசையும் மயிலின் ஆட்டமும்
தேவஉலகில் இருப்பது தோன்றும்
தாய் குழந்தையைப்
பார்த்துக் கொள்வது போல
இவ்வுலகில் இருப்பவர்களை
இயற்கை பார்த்துக் கொள்கிறது.

**செ.கணேஷ்ராம்**
**இரண்டாமாண்டு கணிதவியல்'அ' பிரிவு**

## நட்பு

**அன்று............**
வசந்தத்தின் நிழலில் குளிர்ந்தோம்
வானவில் போல இருந்தோம்
விடைபெறும் வேளை வரவே
வேதனையோடு பிரிந்தோம்.........

**இன்று............**
நிலமென இருந்த மனதில்
விதையென விழுந்த நட்பால்
மரமென வளர்ந்த நினைவே
மனதிற்குள் தாங்குகின்றோம்.

**பொ.சங்கவி**
**இரண்டாம் ஆண்டு உயிர்த்தொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு.**

## மலரும் பருவம்

விழிகள் எனும் குட்டி ஜன்னல்களால்
இவ்வுலகைப் பார்த்தேன்

இமைகள் எனும் இறகுகளால்
இவ்வுலகைப் புரிந்தேன்
தென்றல் மெல்ல விழிகளைக்
கடந்து சென்றது
என் மழலைப் பருவமும்
முடிந்து விட்டது.

சூரியன் மெல்ல வந்து என்னைக்
கூர்ந்து கவனித்து
என் காதில் சுடர் ஏற்றிச் சொன்னது
உன் வாழ்க்கை உன் கையில் என்று............

**ந.மதுமிதா**
**இரண்டாம் ஆண்டு உயிர்த்தொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு**

## வெற்றியின் ரகசியம்

முதலில் தோற்றுப் பார்! தோற்றதினால்
ஏற்படும் வலி உனக்குத் தெரியும்
விட்டுவிடாதே முயற்சிசெய் முயன்றதனால்
ஏற்படும் மகிழ்ச்சி உனக்குக் கிடைக்கும்
அந்த மகிழ்ச்சி விரைவில் வெற்றியாக
உனக்கு அமையும்
தோல்வி என்பது எளிமைதான்
வெற்றி என்பது கடினம்தான்
எளிதில் கிடைப்பது மகிழ்ச்சி அளிப்பதில்லை
கடினப்பட்டு கிடைப்பது வீண்போவதில்லை
வெற்றி என்பது சிகரம்தான் அதை
அடைந்துவிட்டால் உன் வாழ்வே வெளிச்சம்தான்

போரெடுத்து முன்னேறு சிகரத்தைத் தொடு
வெற்றி உன்வசம் ஆகும்.....

**செ.சச்சின்குமார்**
**இரண்டாம் ஆண்டு கணிதம் 'இ' பிரிவு**

## அன்பு

உன் பிஞ்சுக் கால்களால்
நெஞ்சில் உதைத்த போதும்
நான் அழுகின்ற பொழுதும்
நீயும் அழுகின்ற குழந்தைப் போல
பாலூட்டினாய் உன் அன்பை...
உன் அன்பைச் சொல்வதற்கு
என்னிடம் வார்த்தை இல்லை
அம்மா...! ஏன் என்றால் இந்த உலகில்
யாருக்கும் கிடைக்காத புதையல்
நீ ! அதுவே உன் அன்பு
அம்மா...அம்மா...
உன் மடியில் எனக்கு இடந்தந்து
என்னை அரவணைப்பாயா?
உயிரோடு அல்லது பிணமாகவாவது...!

**ஆர்.தினேஸ்**
**இரண்டாமாண்டு இயற்பியல் துறை'அ' பிரிவு**

## நேரம் இல்லை

பொழுது போக்குத் தளங்களில்
பொழுது போக்கும் மனிதர்களுக்கு

நேரம் இல்லாமல் போகிறது.
முதியோர் இல்லத்தில் உள்ள
பெற்றோரைக் காண...!

**ந.தளபதி**
**இரண்டாமாண்டு இயற்பியல் துறை'அ' பிரிவு**

## அப்பா...

அள்ளித்தர இல்லையென்றாலும்
தன்னிடம் இருந்து
அன்பைக் கிள்ளித் தராத
சுனைஊற்று என் அப்பா...
என் எதிர்காலம் பற்றி
யோசித்ததில் அப்பப்பா
மிகப் பெரிய ஆச்சிரியம்
என் அப்பா...!

**ந.தளபதி**
**இரண்டாமாண்டு இயற்பியல் துறை'அ' பிரிவு**

## அறிந்துக் கொள்வோம்

1.தட்சிண கங்கை என்று அழைக்கப்படும் நதி எது? **கோதாவரி.**

2.உலோகங்களைப் பற்ற வைக்கப் பயன்படுத்தும் வாயு எது? **அசிட்டிலின்.**

3.காஸ்மிக் வருடம் என்பது எத்தனை ஆண்டுகளைக் கொண்டது? **25 கோடி.**

4.சூரியன் அஸ்தமனத்தின் போது அண்டார்டிகாவில் வானம் எந்த நிறத்தில் தெரியும் எது? **பச்சை நிறத்தில்.**

5.நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் விமான நிலையம் எங்குள்ளது?

**கொல்கத்தா**.

6.இந்தியாவின் 3-வது பெரிய மாநிலம் எது? **மகாராஸ்டிரா**.

7.சூரத் நகரம் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது? **தப்தி**.

8.பழனி மலையின் புராணப்பெயர்? **பொதினி**.

9.தொன்மையான சங்கீதம் எது? **கர்நாடக சங்கீதம்**.

10.மின் கலங்களில் பயன்படுத்தும் அமிலம் எது? **கந்தக அமிலம்**.

11.“தங்க தீபகற்பம்”என்று அழைக்கப்படும் நாடு எது? **தாய்லாந்து**.

12.அமெரிக்கா நாட்டின் தேசிய பறவை எது? **கழுகு**.

13.நெருப்பு உமிழும் மரங்கள் உள்ள நாடு எது? **மலேசியா**.

**14.**உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் எது? **மூங்கில்.**

15.இரண்டு பிரதமர்கள் கொண்ட நாடு எது? **சான் மரினோ**.

16.முதன் முதலாக நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆண்டு எது? **1904**.

17.பசிபிக் பெருங்கடலில் எத்தனை எரிமலைகள் உள்ளன?

**400 எரிமலைகள்.**

18.“வெயில் நிலம்” என அழைக்கப்படும் கண்டம் எது? **ஆப்பிரிக்கா**.

19.அமைதி பள்ளத்தாக்கு எங்கு உள்ளது? **கேரளா**.

**பி.எம். சரண்யா**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை ‘ஆ’ பிரிவு**

## நட்பு

இரவு என்பது

விடியும் வரை

நெருப்பு என்பது

அணையும் வரை

கனவு என்பது

தெளியும் வரை

நட்பு என்பது
சாகும் வரை.
முயன்ற மனிதர் தோற்றது இல்லை
பாசம் கொண்டால்
பிரிவு இல்லை
கோபம் கொண்டால்
உறவு இல்லை
பேராசை கொண்டால்
நிம்மதி இல்லை
விழிகள் இல்லையெனில்
பார்வை இல்லை
வலிகள் இல்லையெனில்
வாழ்க்கை இல்லை
முயற்சி இல்லையெனில்
வெற்றி இல்லை.

**மா.தீபன்**
**முதலாம் ஆண்டு கணினி அறிவியல்**

## இயற்கை

தினமும் எழும் சூரியனே....!
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்.....!
மேகமே உனக்கு என்ன அவ்வளவு
சோகம் மழையாய் பொழிகிறாய்.....!
வானவில்லே......!
ஏழு வண்ணத்தில் யாருக்காகப் பாதை
அமைக்கிறாய்.....!

எல்லாம் மனிதனுக்காக இல்லை ஆனால் நாம் அனைத்தையும் எடுத்துக்கொண்டோம்........

**த.தீபீகா**

**முதலாமாண்டு நுண்ணுயிரியல் துறை**

## காலங்கள்

காலமே நீ
கடந்து போ...
நாட்களே ஓடிப்போ..
உறவின் காலமோ
நட்பின் காலமோ
அறிந்தும் அறியாமலும்
ஓடின காலங்கள்....
தேர்வு
காலங்கள் தொடங்கினாலும்
நம் விளையாட்டின்
நாட்கள் ஓய்வதில்லை....
அக்காலம்
நினைவூட்டுகிறதா நட்பே....
அன்று செய்த
சின்னச் சின்ன குறும்பும்....
சண்டை போட்ட நொடியும்
நினைவூட்டுகிறதா நட்பே....
அறியாத முகமாய்
இருந்து...
பிரியாத நிழலாய் இன்று...
காலங்களே

நம்மை மாற்றி
நிரந்தரமாய்
உன்னைத் தேற்றி
வெற்றிக்
காலமாக ஓடியது
உன் வாழ்க்கையில்.....

**மு. உமாராணி.**
**இளங்கலைத் தமிழலக்கியம் இரண்டாமாண்டு.**

## மழை

வையத்தை வாழவைப்பாள்
வாட்டத்தைப் போக்கிடுவாள்
ஊழியாகி ஒறுத்திடுவாள்
உன்மத்தம் காட்டிடுவாள்
தாயாயும் களைந்து நிற்பாள்
தனதானியம் ஏந்தி நிற்பாள்
தரித்திரம் விரட்டிடுவாள்
நிகரொன்றும் இல்லாதாள்
அவளைத் தலைத்தாழ்ந்து வணங்கிடுவோம்!!!
அவள் கருணையாலே ஓங்கிடுவோம்!!!

**அ. திவ்யா**
**முதலாமாண்டு நுண்ணியிரியல் துறை**

## வாழ்க்கை


பிரச்சனைகள்
கஷ்டங்கள்
தீர்ந்தபின் சிரிக்கலாம்
என்று நினைத்தால்

வாழ்க்கை முழுக்க
சிரிக்கவே முடியாது....

**வி.பிரதீப்**
**முதலாமாண்டு இயற்பியல் ‘ஆ’ பிரிவு.**

## அறிவியல் தகவல்

## நமது உடலைப் பற்றி நம்ப முடியாத சில உண்மைகள்




வெளி உலகத்தை பற்றி நிறைய தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்குற நமக்கு, நமது சொந்த உடலைப் பற்றி எவ்வளவு தெரியும்...? உங்களுக்கே தெரியாம உங்க உடம்புக்குள்ள எவ்வளவு அதிசயங்கள் இருக்கு தெரியுமா...? நம்ம சொந்த உடலோட உண்மையான வியப்பூட்டுற சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள நாம் என்றும் ஆவலாகவே இருப்போம் இதோ பல,

**பல்சுவை தகவல்கள் உங்களுக்காக..**

**1.)** எச்சில் எல்லாருக்கும் தெரியும். பொதுவாவே எச்சிலைப் பார்த்தா எல்லாருக்கும் அருவருப்பு வரும். ஆனா, உங்க வாழ்நாளில் எவ்வளவு

எச்சிலை உங்க உடம்பு உருவாக்கும்னு தெரியுமா. ஒருநாளைக்கு 0.75லிட்டர்ல இருந்து 1.5 லிட்டர் வரைக்கும் நம்ம வாயில எச்சில் சுரக்குதாம். ஒரு மனிதனோட வாழ்நாள் முழுக்க சுரக்கிற எச்சிலை வைச்சு, 2 நீச்சல் குளத்தை நிரப்பலாம்.

**2.)** நம்ம உடல் முழுசுக்கும் ஆக்ஸிஜனை கொண்டு சேர்ப்பது ரத்த சிவப்பணு. இந்த ரத்தச் சிவப்பணு நம் முழு உடலையும் ஒருரவுண்ட் அடிச்சிட்டு வர எடுத்துக்கிற நேரம் வெறும் 60 நொடிதானாம். அதாவது, ரத்த சிவப்பணு நரம்புவழியா, ஒருமுறை நம்ம உடல் முழுவதையும் சுத்திவர ஒரு நிமிடம் போதுமாம்.

**3.)** நம்ம ஒவ்வொருத்தருக்கும் கண்ணோட கலர் வித்தியாசமா இருக்கும். பெரும்பாலும் எல்லாருக்கும் கறுப்பு நிறத்தில்தான் கண் கருவிழி இருக்கும். ஆனா, என்னதான் இப்ப கறுப்பா இருந்தாலும் நாம பிறக்கும் போது அது நீல வண்ணத்தில்தான் இருக்குமாம். உண்மைதாங்க, உலகத்தில் பிறக்குற பெரும்பாலான குழந்தைகளோட கண்கள் நீலநிறத்தில்தான் இருக்குமாம். வெளி வெளிச்சத்தில இருக்கிற UV ஒளி (புறஊதா ஒளிக்கற்றை) தான் குழந்தையோட கண்ணோட ஒரிஜினல் கலரைக் கொண்டு வருமாம்.

**4)** நம்ம கை, கால்ல இப்பதான் நகம் வெட்டின மாதிரி இருக்கும். ஆனா, கொஞ்ச நாளிலேயே வளர்ந்துடும். ஆனா, நம்ம நகம் புதுசா வேரிலிருந்து ஃபுல்லா வளர கிட்டத் தட்ட 6 மாதம் ஆகுமாம்.

**5)** பொதுவாவே, நம்ம எல்லாருக்கும் அடிக்கடி தோல் உரியும். நம்ம வாழ்நாள் முழுசும், உடம்பில இருந்து மொத்தமா எவ்வளவு தோல் உரியும்னு தெரியுமா. வாழ்நாள் முழுசும் நம்ம உடம்பில இருந்து உரிந்து விழுற தோலோட எடை கிட்டத் தட்ட 18 கிலோ…!!

**6)** நம்ம உடம்பில் மூளை மட்டும் நம்ம எடுத்துக்கிற ஆக்ஸிஜன் மற்ற எனர்ஜியில் இருந்து 20% பயன்படுத்திக்குமாம்.

**7)** நம்ம கிட்னில 1 மில்லியன் ஃபில்டர்கள் இருக்காம். அதோட நம்ம கிட்னியால, ஒரு நிமிஷத்துக்கு 1.3 லிட்டர் ரத்தத்தை சுத்தம் செய்ய முடியுமாம்.

**8)** பெண்களோட கருப்பையில், 5,00,000 கருமுட்டைகள் உருவாகுமாம். ஆனால், இதுல 400 முட்டைகளுக்குத் தான் குழந்தையாக உருவாக வாய்ப்பு கிடைக்குமாம்.

**9)** நம்ம மேல வியர்வை நாற்றம் வருதே அது வெறும் நாற்றம் இல்ல. ஒவ்வொருத்தரோட அடையாளம். உலகத்தில ஒவ்வொருத்தருக்கும் இந்த நாற்றம் மாறுபடுமாம். இரட்டையர்களைத் தவிர.

**10)**வயிற்றுக்குள்ள சாப்பாடு செரிக்குது. ஆனா, உள்வயிறு அல்லது வயிற்றோட உட்பகுதி மட்டும் எப்படி செரிமானம் ஆகாம இருக்கு…? உண்மையாவே, வயிற்றோட உட்பகுதியும் செரிமானமாகும். ஆனா, செரிக்கிறதை விட ரொம்ப வேகமா உள்வயிற்றோட செல்கள் வளர்ச்சி அடைந்து அதை ஈடு கட்டிடுமாம்.

**11)**மனிதர்கள் 90% பார்வையை நம்பித்தான் இருக்காங்க. நம்ம சுற்றுப் புறத்தைப் பற்றி நாம தெரிஞ்சுக்கிற 90%விவரங்கள் நம்ம பார்வை மூலமாதான் கிடைக்குதாம்.

**12)**உங்களை உங்களாலேயே டிக்கிள் பன்ன முடியாது. புரியலயா?. கிச்சுக் கிச்சு... உங்களாலேயே உங்களை கிச்சு கிச்சு மூட்டிக்க முடியாது.

**13)** நம் எலும்புகள் எவ்வளவு வலுவானது தெரியுமா...? ஒருபவுண்ட் காய்ந்த சிமெண்ட் கான்கிரீட், ஒருபவுண்ட் மனித எலும்பு இந்த இரண்டையும் வச்சு டெஸ்ட் பண்ணினதுல மனித எலும்பு கான்கிரீட்டை விட 4 மடங்கு வலுவானதுன்னு நிரூபணமாகி இருக்காம்.

**14)** நம்ம உடம்பிலேயே ரொம்ப நீளமான உறுப்பு எது தெரியுமா....?? தோல் தான். நல்லத வளர்ந்த ஆணோட தோலை முழுசா நீட்டி அளந்தா 20 சதுர அடிக்கு வருமாம்.

**15)** நாம எதையாவது சுவைக்கனும்னா அந்தப் பொருள் முதல்ல எச்சில்ல கரையனுமாம். இல்லைன்னா, நம்மால சுவைய உணரவே முடியாது. நம்பலைன்னா எச்சில் இல்லாம டேஸ்ட் பாருங்க...

**16)** ஒரு சராசரி ஆணால ஒரு நாளைக்கு 10 மில்லியன் விந்தணுவை உற்பத்தி செய்ய முடியுமாம். அதாவது ஒரே ஒரு ஆணோட விந்துவை வச்சே உலகத்துல இருக்கிற மொத்த மக்கள் தொகையை வெறும் 6 மாதத்துல உருவாக்கிடலாமாம்.

**18)** நாம் எவ்வளவு உயரமா இருந்தாலும், தூங்கும்போது கிட்டத்தட்ட 1 செ.மீ. உயரம் குறைஞ்சுடுவோம். காரணம், நம்ம முதுகெலும்புல இருக்கிற குறுத்தெலும்புகள் நாம் தூங்கும் போது, சுருங்கிடுமாம்.

**19)** நம்ம உடம்புல கிட்டத்தட்ட 5 லட்சம் வியர்வைச் சுரப்பிகள் இருக்காம். இந்த வியர்வைச் சுரப்பிகள் ஒவ்வொன்னும், தினமும் 400 மில்லிலிட்டர் வியர்வையைச் சுரக்குமாம்.

**தொகுப்பு:**
**திரு.மு.சதீஸ்குமார்**
**தமிழ் - உதவிப்பேராசிரியர்**

## பொது அறிவு

**1.**"ஆசுகவி" என்றழைக்கப்படுபவர் யார்? **காளமேகப்புலவர்**

**2.**பாரதியார் நடத்திய நாளேட்டின் பெயர் என்ன? **இந்தியா**

**3.**"குழந்தைக் கவிஞர்" என்று அழைக்கப்படுபவர் யார்? **அழ.வள்ளியப்பா**

**4.**"தமிழர் தந்தை" என்றழைக்கப்படுபவர் யார்? **சி.பா.ஆதித்தனார்**

**5.**"வேலூர் சிப்பாய்க் கலகம் நடைபெற்ற ஆண்டு? **1806**

**6.**கரிசல் பூமி என்றழைக்கப்படும் தமிழக மாவட்டம் எது? **திருநெல்வேலி**

**7.**காமராஜரின் குருவின் பெயர் என்ன? **சத்தியமூர்த்தி**

**8.**பிற்காலச் சோழப் பேரரசை நிறுவியது? **விஜயாலயச் சோழன்**

**9.**நெஞ்சுக்கு நீதி நூலின் ஆசிரியர் யார்? **மு.கருணாநிதி**

**10.**தமிழில் வெளிவந்த முதல் நாடக நூல் எது? **ராஜராஜவிஜயம்**

**இரா.செல்வகுமார்**
**இரண்டாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

# மௌனக்கேள்விகள்

தான் வாங்குகிற ரோஜாவில்
உனக்கும் ஒன்று சேர்த்தே வாங்கும்
பிரியத்தோழியை விட்டு
நீ தூரத்தில் வரும்போதே
துள்ளி ஓடி வந்து நேசத்தை உணர்த்தும்
செல்ல நாய்க்குட்டியை விட்டு
பதியன் போட்டுப்
பார்த்துப் பார்த்து வளர்த்த
கொல்லைப்புற
பூந்தோட்டத்தை விட்டு
கடைக்குப் போகச் சொன்னால்
சிணுங்காமல் போய் வந்து
'அக்கா' எனக் கொஞ்சும்
அண்டை வீட்டுச் சிறுவனைவிட்டு
அம்மா திட்டினால் ஆறுதலாய்
மடி தந்து.....
அன்பாய் வருடி விடும்
ஆசைப்பாட்டியை விட்டு
வெள்ளிக்கிழமைகளில்
மறக்காமல் பூ வைத்து வணங்கும்
முச்சந்தி பிள்ளையாரை விட்டு
வெளியூர் போய் வரும்போது
உனக்குப் பிடித்த இனிப்பை
மறக்காமல் வாங்கிவரும்
அன்பான அப்பாவைவிட்டு
அர்ச்சனையாய்த் திட்டினாலும்

அடுத்த நொடியே
கண்கலங்கும் அம்மாவையும்விட்டு
மருமகளாய் மறுவீடு செல்லும்
உன் கண்ணீரில் மௌனமாய்
பல கேள்விகள்
மறைந்தே இருக்கும்.

**மு.உமாராணி**
**இரண்டாமாண்டு இளங்கலைத் தமிழிலக்கியம்**

## அம்மா

மறுமுறை உந்தன்
கருவறை வேண்டும்
முழுவதும் துறந்து
முழுமையாக
உன்னில் சங்கமமாக
மறுபடி என்னை
மடியினில் சுமப்பாயா?
தாயின் கருவறையைப்
பார்த்த பின்பு
ஒரு முடிவுக்கு
வந்துவிட்டேன்...
இருள் நிறைந்து இருப்பது
நரகம் மட்டுமல்ல
சொர்க்கமும்தான் என்று.

**பொ.கோகுல்ராஜ்**
**முதலாமாண்டு நுண்ணுயிரியல் துறை**

## தத்துவக் கவிதை

தவறி விழுந்த விதையே
முளைத்து வரும் போது
தடுமாறி விழுந்த உன்
வாழ்க்கை சிறக்காதா என்ன?
ஒருவனிடம் அறிவு இருந்தும்
அவனிடம் ஆற்றல்
இல்லையென்றால்
அவன் வாழ்வு சிறக்காது...

**வி.பிரதீப்**
**முதலாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு.**

## உழைப்பு

உன் எண்ணம்
விண்ணைத்
தொடவேண்டுமென்றால்
உன் வியர்வை
மண்ணைத்
தொடவேண்டும்.....

**வி.பிரதீப்**
**முதலாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு.**

## ஆசையே துன்பத்திற்கு காரணம்

புழுவிற்கு மீன் ஆசைப்பட்டது
மீனுக்கு மனிதன் ஆசைப்பட்டான்
மீனுக்கு சிக்கியது புழு.
மனிதனுக்கு சிக்கியது மீன்.

புழுவிற்கு.......?

ஆனாலும் காத்திருந்தது புழு.

மனிதன் மண்ணுக்குள் வரும் வரை.

எதுவும் எதையும் விட

உயர்ந்ததுமல்ல தாழ்ந்ததுவுமல்ல.

**சு.வினிதா**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாம் ஆண்டு.**

## பொது அறிவு

1.தமிழ்நாட்டில் முதன்முதலில் வானொலி நிலையம் எங்கு எப்போது ஆரம்பமானது? **விடை:** 1924 சென்னை

2.உலகிலேயே விமானப்படையைத் தொடங்கிய முதல் நாடு எது?

**விடை:** அமெரிக்கா (1907)

3.பட்டு நூலை முதலில் கண்டறிந்தவர்கள் யார்?

**விடை:** சீனர்கள்

4.கடல்களின் அரசி என அழைக்கப்படும் நாடு எது?

**விடை:** இங்கிலாந்து

5.முதலை சுமார் எவ்வளவு நீளம் வளரும்?

**விடை**: 7 மீட்டர்

6.தமிழ்நாடு பரப்பளவில் எத்தனையாவது பெரிய மாநிலம்?

**விடை:** 11

7.சென்னைக் ஜார்ஜ்கோட்டை எப்போது கட்டப்பட்டது?

**விடை:** 23.04.1640

8.நீர் நாய் குரைக்குமா?

**விடை:** குரைக்காது

9.கடல் நாய் என அழைக்கப்படுவது எது?

**விடை:** சீல்

10.உலகில் மக்கள் அதிகமாகப் பேசக்கூடிய மொழி எது?

**விடை:** சீனம்

**சு.விஜயா**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாம் ஆண்டு.**

## இயற்கை

விதைகள் கீழ்நோக்கி
  எறியப்பட்டால்தான்
விருட்சங்கள் மேல்
  நோக்கி வளரும்....
விழும் போது
  விதையென விழு...
எழும் போது
  விருட்சமாய் எழு...

**பி.கௌதம்**

**முதலாமாண்டு கணிதம் 'அ' பிரிவு.**

## பொது அறிவு

- உலகிலேயே பூமி அதிர்ச்சி அதிகம் ஏற்படும் நாடு எது?

  **விடை: ஜப்பான்**

- தண்ணீரில் இருக்கும் ஆக்ஸிஜனின் அளவு எவ்வளவு?

  **விடை: 89%**

- பாலைவனங்களில் காணப்படும் செடி வகை எது?

  **விடை: காக்டஸ்**

- மழையின் அளவை அளக்கப்பயன்படுவது எது?

  **விடை: யுடோ மீட்டர்**

- மிகவும் கனமான மூளை உள்ள விலங்கு எது?

  **விடை: திமிங்கலம்**

- வைட்டமின் -எ அதிக அளவு காணப்படும் உணவுப்பொருள் எது? **விடை: பால்**

- த்ராம்போஸிஸ் என்னும் நோய் எதனுடன் சம்பந்தப்பட்டது?

  **விடை: இரத்தம்**

- பாரத ரத்னா விருதை வழங்குபவர் யார்?

  **விடை:** குடியரசுத்தலைவர்

- மனித மூளையின் எடை என்ன?

  **விடை: 2 கி.கிராம்**

- உலக அதிசயங்களில் ஒன்றான பைசா கோபுரம் எப்போது கட்டப்பட்டது? **விடை: 14 ம் நூற்றாண்டு**

- பாம்பின் விஷம் எந்த நோயைக் குணப்படுத்துகிறது?

  **விடை: புற்றுநோய்**

- ஆஸ்கார் விருதில் வழங்கப்படும் சிலையின் எடை எவ்வளவு?

  **விடை: 4 கிலோ கிராம்**

- இலைகளுக்கு நிறம் தருவது எது?

  **விடை: குளோரோ.ஃ.பில்**

- எரிமலையிலிருந்து வெளி வருவது எது?

  **விடை: லாவா**

- இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிப்பவர்கள் எவ்வளவு? **விடை: 26.10%**

- மிகவும் ஆபூர்வமாகக் காணப்படும் இரத்த வகை எது?

**விடை: AB**

- எலும்பு வளர்ச்சிக்கு தேவைப்படும் சத்து எது?

**விடை: கால்சியம்**

- சிலிக்கன் - டை – ஆக்ஸைடு என்பது என்ன?

**விடை: மணல்**

- இராணிக்கோப்பை எந்த விளையாட்டுக்கு வழங்கப்படுகிறது?

**விடை: கிரிக்கெட்**

**கே.கீதாஞ்சலி**

**முதலாமாண்டு கணிதம் 'அ' பிரிவு.**

## மழையும் உழவனும்

மழை பொழியவில்லையே
என்று உழவர்கள்
கண்ணீர் மழையை
தினம்தினம் பொழிகிறார்கள்!
மழை என்னும் தேவாமிர்தம்
பூமிப்பந்தை முத்தமிட்டால்தான்
செந்நிறக்கதிர்கள் தலைதூக்கும்
நம் உழவர் பெருமக்கள்
தலைகவிழாமல்
இருக்க....

**அ.ரசிகாதேவி**

**முதலாமாண்டு நுண்ணியிரியல்**

## தனிமை

தனிமையாக இருக்கிறோம் என்று நினைத்து
வருத்தப்படாதே....
ஒவ்வொரு நொடியும் யாராவது உன்னை
நினைத்துக் கொண்டு இருப்பார்கள்
இப்போது நான்.....

**வி. இளமதி**
**முதலாமாண்டு கணினிஅறிவியல் 'ஆ' பிரிவு**

## கண்ணக்குழி

உன் புன்னகை எனக்குப் பிடிக்கும்
அதைச் சொல்ல வரும் போது
உன் கண்கள் என்னைத் தடுக்கும்
உன் கண்ணக் குழியில் கவிழ்ந்தேன்
காலம் முழுவதும் வீழ்ந்தேன்
என்னால் எழ முடியவில்லை
ஏனென்று தெரியவில்லை.

**மு.சிவசங்கர்**
**முதலாமாண்டு உயிர் வேதியியல்**

## சுதந்தரம் - ஓர் பார்வை

பஞ்சம் பிழைக்க வந்தவன்
நம்மை பஞ்சமாக்கினான்
பிச்சைப் போட்டவனோ
பிச்சைக்காரனாகினான்!
வந்தோரை வாழ வைத்த

பூமி இன்று
வறண்டு கிடக்கின்றது.
கொஞ்சி விளையாடிய
பெண்மணிகள் கொடுமைக்கு
ஆளாயினர்!
தங்கக் கிண்ணத்தில்
பால்சோறு உண்ண
மறுத்த பச்சிளம்பிள்ளைகள்
சோற்றுக்கு வழியில்லாமல்
சொர்க்கத்தைத் தேடுகின்றனர் !
அகமென்றும் புறமென்றும்
வாழ்விற்கு விதியளித்தவன்
இன்று வீதியில்
தத்தளிக்கின்றான் !
வானம் பார்த்து
பூமியைக் கிழித்தவன்
சுரண்டியவன் மிரட்டலுக்கு
சுருண்டு போனான் !
புறமுதுகு காட்டாதவன்
பிறநாட்டினருக்கு
அஞ்சிநின்றான் !
வாடி வதங்கிய பயிர்களுக்கு
வர்ணபகவான் தந்த
மழைநீர் போல
வக்கீல் படிப்பை
முடித்து வந்ததொரு
விடிவெள்ளி!
காந்தி எனும் பெயரில் வந்தது

எம்பெரும் நாட்டிற்கு!
பெய்த மழை ஓரிடத்தில்
பெய்யவில்லை!
ஆச்சரியம்!
மழை பெய்த இடத்தில்
காமராஜன் போன்ற
பல காந்திகள்!
பச்சையம் ஏற்காமல்
இறந்த காளான் போல
உணவு ஏற்காமல்
இறந்து பெற்றனர்.
இந்தப் பாவப்பட்ட
சுதந்திரத்தை!
கிடைத்த சுதந்திரம்
இரவு நேரத்தில்
அதனால் என்னவோ
இன்னும் விடியவில்லை!
கல்லடி குண்டடிப்பட்டு
பெற்ற சுதந்திரம்
இன்று கைபேசியினால்
களவாடப்பட்டது.
இரவு பகல் பாராது
கண்டெடுத்த சுதந்திரம்
இன்று இளைஞர் கையில்
புகையுடன் எரிகிறது.
ஆயிரக்கணக்கான
உயிர்களைக் குடித்துப்
பெற்ற சுதந்திரம்


குடிகாரன் கையில்
மூழ்கிக் கிடக்கிறது.
கிடைத்த சுதந்திரம்
கிடக்கட்டும்
என்று புறப்பட்டு விட்டான்
புகைவண்டி ஏறி
அந்நிய மண்ணில்
அடிமையாய் இருக்க!
இந்தியா சுதந்திரமடைந்து
எழுபது ஆண்டுகளாம்
இல்லை!
இன்னும் எழுபது
ஆண்டுகளிலாவது
சுதந்திரம்
அடைந்து விடுமா….?

**இரா.காவியா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு**


G. Rajesh kumar
II - Phy "B"


P. Madhumathi
I BSc T.F.


தே. கல்தா.
பி. எஸ். சி இயற்பியல் I - B
31. 07. 2017


வே. ரம்யா
I. பி.எஸ்.சி (இயற்பியல)
தமிழ்